# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹ்ஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
முனைவர் த. முத்துலட்சுமி

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
கி.தமிழரசி

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
ம.கலைச்செல்வன்

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
முனைவர் ப. மணிகண்டன்

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
முனைவர் அ.புஷ்பா

**கனினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
கு.நிவேதா

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
திரு. விசுமாப்போடி சசிகரன்

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
முனைவர் வே.இரவி

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
முனைவர் அ. மதலேன்

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
முனைவர்அ. அமுல்ராஜ்

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

நன்றி

# கணினி மற்றும் ஊடகம்

# *The Role of Media in Language Development*

***Dr. E. Esakkiammal,*** *Associate Professor In Tamil , S.A.College Of Arts & Science, Thiruverkadu.Chennai — 600077, Orcid:Https://Orcid.Org/0009-0007-7776-3160*

***Abstract:***

*Language is a system of sounds, words, and symbols used to convey ideas and facilitate communication. Media, as a powerful channel, disseminates information and shapes public opinion across large audiences. The use of Tamil in various media platforms exhibits multiple levels of expression, with each medium developing its own distinctive linguistic style.This study explores the role of Tamil in media development, examining how the language is represented, communicated, and preserved across different platforms. Media not only reflect political, socio-economic, artistic, and literary needs but also integrate cultural and historical contexts while serving commercial and advertising purposes.The research aims to investigate how Tamil is employed in media, how its usage is expressed and promoted, and how media can contribute to preserving and propagating the language among audiences, including those who are less familiar with it.*

***Keywords:*** *language, Computer, Media, Internet, Tamil*

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**

**முனைவர் ஈ இசக்கியம்மாள்,** இணைப் பேராசிரியர் , தமிழ்த்துறை,எஸ். ஏ .கலை மற்றும் அறிவியல் கல்லூரி திருவேற்காடு சென்னை.

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு கருத்தை, ஒரு எண்ணத்தை அல்லது ஒரு சிந்தனையை வெளிப்படுத்தி பிறருடன் தொடர்பு கொள்ள ஓசைகளையும், சொற்களையும், குறியீடுகளையும் கொண்ட ஒரு தொகுதியே மொழியாகும். ஊடகங்கள், வெகு ஜனங்கள் மத்தியில் தகவல்களையும் செய்திகளையும் பரப்பி அபிப்ராயங்களை விதைக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டவை ஊடகங்கள். ஊடகங்களில் தமிழ் மொழிப் பயன்பாடு பல்வேறு நிலையில் உள்ளது. ஊடகங்கள் தமக்கென தனித்துவமான மொழிநடையைக் கொண்டிருக்கின்றன. ஊடக வளர்ச்சிப் போக்கில் தமிழ் மொழி எவ்வகையில் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறித்தும் ,தமிழ் மொழிப் பயன்பாடு ஊடகங்களில் எவ்வாறு

வெளிப்படுத்துகின்றன என்பதையும் ஆராய வேண்டியத் தேவை உள்ளது. அரசியல், சமூக பொருளாதார ,கலை இலக்கியத் தேவைகளையும், இருப்புகளையும் பண்பாட்டோடு இணைந்த வரலாற்றுப் பணிகளையும், வர்த்தக விளம்பர நோக்கங்களையும் ஒரு தளத்தில் நின்று வெளிக்கொணரும் ஒரு சாதனமாகவும் ஊடகங்கள் விளங்குகின்றன. ஊடக வளர்ச்சிப் போக்கில் தமிழ் மொழி எவ்வகையில் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறித்தும், தமிழ் மொழிப் பயன்பாடு ஊடகங்களில் எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதைப் பற்றியும், தமிழை அறிய விடாமல் காப்பாற்றி அதனை வளர்ச்சியடையச் செய்வதற்கு ஊடகங்கள் எவ்வகையில் பங்களிப்பினை வழங்கலாம் என்பதே இவ்வாராட்சியின் நோக்கமாக உள்ளது.

**திறவுச்சொற்கள்:** மொழி, கணினி, ஊடகம், இணையம், தமிழ்

**முன்னுரை**

மொழி மனிதனின் சிந்தனையையும், ஆற்றலையும் வளர்க்கும் கருவியாக உள்ளது. மொழி காலந் தோறும் சமூக சூழலுக்கு ஏற்ப வளர்ந்து வரக்கூடியது. இதனால் மொழியைக் கால அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் பகுத்துப் பார்க்கப்படுகிறது. ஒரு மொழி வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றம் பெறுகிறது. இந்த மாற்றம் அதன் கட்டமைப்பிலும், மொழி ஆளுமையிலும் காணக் கிடைக்கிறது. இக்கட்டுரை ஊடகங்கள் தமிழ் மொழி வளர்ச்சியில் எத்தகைய பங்கு வகிக்கிறது என்பதை ஆராய முற்படுகிறது.

**ஊடக மொழி**

ஊடகங்களின் மொழி அவற்றின் செயல் தன்மை அடிப்படையில் அமைகிறது. ஊடக மொழி புத்தகம், இதழ், நாளிதழ், விளம்பரம், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, பல் ஊடகம் எனப் பல நிலைகளில் அவற்றின் தன்மைக்கு ஏற்ப அமைந்துள்ளன. தமிழில் அதன் ஆரம்ப கால மொழி நடை செய்யுள் வடிவில் இருந்தது. பின்னர் மேலைநாட்டு இலக்கியத் தாக்கத்தால் அதில் உரைநடை, புதினம், சிறுகதை போன்ற நடைக் கூறுகள் தோன்றின. அதுபோல தகவல் தொடர்பு வளர்ச்சிக்கு ஏற்ப ஊடக நடைக் கூறுகளும் அந்தந்த ஊடகங்களின் செயல் தன்மைக்கு ஏற்ப மாறுபட்டு அமைந்துள்ளன.

**அச்சு மொழி**

அச்சில் பலவகையான நடைக் கூறுகள் உள்ளன. இவற்றில் கட்டுரை, நெகிழ்வுரை, சிறுகதை, புதினம் போன்ற கூறுகள் உரைநடை வடிவில் அமைந்துள்ளன..இவற்றைப் புத்தகக்கூறு என்று அழைப்பர். புத்தக நடை ஆசிரியரின் மொழி ஆளுமையைப் பொறுத்து சிறப்புப் பெற்று விளங்கக் கூடியது. தமிழ் இதழ்கள் குமுதம், ஆனந்த விகடன், குங்குமம் போன்றவற்றின் நடைக் கருத்து கோவையாக அவற்றின் செய்திகளின் தன்மைக்கு ஏற்ப அமைந்துள்ளன.

இவற்றில் பல்வேறு ஆக்கங்கள் எழுத்தாளர்களின் செயல் திறனுக்கு ஏற்ப சிறப்புப் பெற்று விளங்குகின்றது. தமிழில் தினமணி, தினத்தந்தி, தினமலர், தினகரன் போன்ற நாளிதழ்கள் வெளி வருகின்றன. இந்த நாளிதழின் நடை பல்வேறு வடிவமைப்பைக் கொண்டது இதில் இடம்பெறும் தலையங்கம், ஆசிரியர் கடிதம், பண்பாட்டுக் கூறுகள் செய்திகள் போன்றவை பல்வேறுத் தன்மைகளைப் பெற்று விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக நாளிதழின் செய்தி வடிவம், தலைப்பு, முகப்பு, உடல் என்ற தன்மையில் அமைந்துள்ளது. செய்தியின் தலைப்பு செய்தியின் சுருக்கக் கருத்தை விளக்குகிறது. இது எழுவாய் ,பயனிலை இந்த தன்மையில் அமைந்திருக்காது. செய்திகள் பத்திகளாகவும் ,தலைப்பு அடுக்கு நிலையிலும் அமைந்துள்ளன. செய்தியின் மொழிநடை வாசகர்களின் புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கு ஏற்ப அமைந்துள்ளன. செய்திகள் பெரும்பாலும் தலைகீழ் பிரமிடு முறைகளில் விளக்கப்பட்டு இருக்கின்றன. பத்திரிக்கை மொழி ,உரைநடை சார்ந்ததாக இருப்பினும் ஒவ்வொரு பத்திரிக்கையும் தனக்கென ஒரு தனி அடையாளத்தைக் கொண்டு விளங்குகிறது. பத்திரிகைகள் தங்களை அடையாளப்படுத்துவதற்காகத் திட்டமிட்டு சில சொற்களைத் தேர்வு செய்து பயன்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக "நாடாளுமன்றம்" என்று சொல்லை தினமணி பத்திரிக்கையும் "பாராளுமன்றம்" என்ற சொல்லைத் தினத்தந்தி பத்திரிக்கையும் பயன்படுத்துகின்றன.

**விளம்பரங்கள்**

தமிழ் விளம்பர நடை ஒவ்வொரு ஊடகத்தின் தன்மைக்கு ஏற்ப மாறுபடுகின்றன. தமிழில் வெளிவரும் விளம்பரங்களை இதழ் ( *magazine)* விளம்பரம், நாளிதழ்( *News paper)* விளம்பரம், வானொலி விளம்பரம், தொலைக்காட்சி விளம்பரம், பல் ஊடக( *Multimedia)* விளம்பரம், வெளிப்புற( *Outdoor)* விளம்பரம், நேரடி( *direct)* விளம்பரம் எனப் பலவாராகப் பகுக்கப்படுகின்றன. இவற்றின் மொழி ,நடை, உள்ளடக்கம், பயனாளரின்( *user)* மொழி ஆளுமை, கால அளவு( *duration of time),*ஒதுக்கப்படும் இடம் ( *space)* போன்றவற்றைப் பொறுத்து மாறுபட்டு நிற்கும்.

**திரைப்பட மொழி**

தமிழ் திரைப்படங்கள் வாழ்வியல், எண்ணம், கற்பனை, பண்பாடு போன்றவற்றை எடுத்துரைக்கின்றன. திரைப்படம் ஒலி, ஒளி கூறுகளைக் கொண்டிருந்தாலும் அதன் கண்ணோட்டம் கருத்துக்களை எடுத்துரைக்கக்கூடிய அமைப்பு முறையில் தான் அமைந்துள்ளது.திரைப்படம் பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் கற்பனை வளத்திற்கும் முக்கியத்துவம் தரக்கூடியதாக இருப்பினும் மக்களின் நம்பிக்கை, சிந்தனை போன்றவற்றை

பிரதிபலிக்கக்கூடியனவாகவும் இருக்கிறது. திரைப்பட நடையை திரைப்படத் தொழில்நுட்பம் சார்ந்த விசயங்களும் கதை ஓட்டமும் நிர்ணயம் செய்கிறது.

**வானொலி மொழி**

தமிழ் வானொலி நிகழ்ச்சிகளைத் தொழில்நுட்ப ரீதியாக அலை (AM) மற்றும் பண்பலை (FM )என்று பகுக்கின்றனர். அலை நிகழ்ச்சிகள் அகில இந்திய வானொலி நிலையம் மூலம் ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. பண்பலை நிகழ்ச்சிகள் தனியார் ஒளிபரப்பு நிலையங்களாலும், அகில இந்திய வானொலி நிலையங்களாலும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் சொற்களாலும், இசையாலும் இரண்டறக் கலந்து நிற்கின்றன. இந்நிகழ்ச்சிகள் மொழி ஆளுமை மற்றும் அதன் பண்புகள் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. இந்நிகழ்ச்சிகளில் செய்திகள், கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் சேவை நிகழ்ச்சிகள் போன்றவை இடம்பெறுகின்றன. இவற்றின் மொழி வடிவங்கள் பேச்சுரை( talk) உரையாடல்,,தனிப் பேச்சு உரை( monologue), நாடகம் ,கவிதை, இசை எனப் பல கூறுகளைக் கொண்டு விளங்குகிறது.இவற்றில் பயன்படுத்தப்படும் சொற்கள், வாக்கியங்கள், எளிமையாகவும் சிறியதாகவும் நேயர்கள் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்திருக்கின்றன. வானொலியின் பண்பாடு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் சிந்தனைகளை வெளிப்படுத்தக் கூடியனவாக அமைந்திருக்கின்றன.

**தொலைக்காட்சி நடை**

தமிழ் தொலைக்காட்சி நடை காட்சி, ஒலி கட்டமைப்பு (format) ஆகியத் தன்மைகளைக் கொண்டது. ஒளி அமைப்பு ,பேச்சு, இசை ஆகியவற்றைக் கொண்டது. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், நாடகம் ஆகியவற்றின் கூறுகளை உள்ளடக்கியது. சன், ஜெயா, கலைஞர், மக்கள் போன்ற தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகளின் பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல் முறைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கக்கூடியனவாக அமைந்திருக்கின்றன. இவை அவற்றின் தொடர்கள் ( serials) பாடல்கள், காட்சிகள் போன்றவற்றின் வழியாக வெளிப்படுத்துகின்றன.

**பல் ஊடக மொழி**

கணினி பல் ஊடகத் தன்மை கொண்டது. இதில் இணையம்( internate) முக்கியப் பங்கு வகிக்கின்றது. உலகின் எப்பகுதியிலும் வாழும் மக்கள் இணைய வழித் தமிழ் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது. இணைய வழி அஞ்சல்கள்( E-mail), வலைதளங்கள் ( website),கணினி ஒளிபரப்புதல்( podcasting),மின்னணு மேடைகள் (eforums),மின்னணு புத்தகங்கள்( ebooks), வலைப்பதிவுகள்( blogging),சமூக வலை தளங்கள்

என்று சொல்லக்கூடிய முகநூல் ( Facebook),ட்விட்டர்(Twitter) , யூடியூப் (youtube) போன்றவை பயனாளர்களின் மொழி ஆளுமைக்கு ஏற்ப அவர்களின் கருத்துக்களை எடுத்துக் கூறப் பயன்படுகின்றன.

**ஊடக மொழியின் சிறப்புகள்**

ஊடக மொழியின் நடையை 1, நடையியல் கருவிகள்( stylistic devices) 2.வெளிப்பாட்டு பொருள் நடை என இருவகையாக பகுக்கலாம். இதில், வெளிப்பாட்டு பொருள் நடை, ஒலியியல்,உருபனியியல், சொல் கட்டுமானம்( word building),சொல்லியல், சொற்றொடர், வாக்கிய அமைப்பு என்ற நிலைகளில் அமைக்கப்பெறும் ஊடக வெளிப்பாட்டு பொருள் நடை, அந்தந்த தமிழ் ஊடகங்களின் தன்மைக்கேற்ப மாறுபட்டு நிற்கின்றன. இது அந்தந்த ஊடகக் கூறுகளைப்( genre) பொறுத்து அமைந்துள்ளன.நடையியல் கருவிகள் உணர்வுடன் நோக்க அடிப்படையில் பொருள் பொதிவுடன் அமைக்கப்படும் மொழி அலகுகள் ஆகும். நடையியல் கருவி ஒரு கருத்தமைவைக் குறிக்கக் கூடியது. இது எந்த ஒரு உள்ளடக்கத்தையும் வடிவமைத்து உணர்த்தப் பயன்படுகிறது. தமிழ் ஊடக நடையியல், கருவிகள் அதன் கூறுகள்( genre) அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

**மொழி வடிவம்**

ஊடக மொழி வடிவம் 1,பேச்சு உரை,2. எழுத்து வடிவம் என்ற நிலைகளை உடையது. இந்த நடை எடுத்துக்கொள்ளப்பட்ட ஊடகத்தை பொறுத்து அமைகிறது. இதற்கு அதற்கான ஊடகப் பொருள் அடிப்படையாக அமைகிறது. இந்த ஊடகப் பொருள் மேலாளர்ந்த நிலை, உள்ளார்ந்த நிலை என்ற இரு தன்மைகளைக் கொண்டது. ஊடக உள்ளடக்கத்தில் அதன் செய்திகள் மேலார்ந்த நிலையைச் சார்ந்துள்ளது .இதன் கருத்து நேரடிப் பொருளை உணர்த்தக் கூடியது. இது கூறுபவரின் நிலையிலிருந்து செய்தியைப் புரிந்து கொள்ள உதவுகிறது. ஊடகத்தின் மற்ற கூறுகள் ( genres) உள்ளார்ந்த நிலையில் அமைந்திருக்கின்றன.இதுக் கேட்பவரின் மொழி ஆளுமையைப் பொறுத்து அமையும். ஊடகத் தொடர்கள் (serials),பாடல்கள் கருத்துரைகள் போன்றவை இதைச் சார்ந்ததாக அமையப் பெற்றுள்ளன.

**முடிவுரை**

மொழி பண்பாடு சார்ந்தது. தமிழ் ஊடக மொழி எளிமையாகவும், பேச்சு வடிவ நடையிலும் அமைந்துள்ளன. தமிழ் ஊடகங்கள் தங்களது நிகழ்ச்சிகளில் ஆங்கில சொற்கள் பயன்படுத்துவதை ஒரு சிறப்பு நிலை மொழி வெளிப்பாடாக கருதுகின்றனர். காலப்போக்கில் இம்மொழி ஒரு பிட்கின் ( pidgin) மொழியாக மாற வாய்ப்புள்ளது. இதைத் தவிர்க்க தமிழ் ஊடகங்கள் முழுமையாக தமிழ் சொற்களைப் பயன்படுத்த முன்வர வேண்டும் .சொற்கள்

கிடைக்காத நிலையில் வட்டார சொற்களைப் பயன்படுத்த வேண்டும். அப்போதும் கிடைக்காவிட்டால் மொழி பெயர்ப்புச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் அப்போதுதான் தமிழ் மொழியும் தமிழ் பண்பாடும் கால ஓட்டத்தில் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.


**<u>பார்வை நூல்கள்</u>**

1.இதழியல் கலை மா. பா.குருசாமி, குருதே மொழி பதிப்பகம், திருச்செந்தூர்.

2.தமிழ் சினிமாவின் கதை அறந்தை நாராயண ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை.

3.தொலைக்காட்சியும் பிற தகவல் துறைகளும், வே. நல்லதம்பி வள்ளுவன் வெளியீட்டகம், சென்னை.

4.அலைந்து திரிபவனின் கதை, சாரு நிவேதிதா, அடையாளம் பதிப்பகம், சென்னை.

5. ஊடகவியல் , த .ரெஜித்குமார், என் .சி .பி.எச்.சென்னை .

6 மக்கள் தகவல் தொடர்பியல், கி. ராசா ,பார்த்திபன் பதிப்பகம் .

7.தமிழ் பத்திரிகைகள் க.குளத்தூரான் ஜெயக்குமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில் .

8.எம் தமிழர் செய்த படங்கள் ,தியோடர் பாஸ்கரன்.

*Reference Books*

1. *Journalism Art — M. P. Gurusamy, Gurudhe Language Publications, Tiruchendur.*
2. *The Story of Tamil Cinema — Aranthai Narayanan, Senbhaga Publications, Chennai.*
3. *Television and Other Communication Fields — V. Nallathambi, Valluvar Publishing House, Chennai.*
4. *The Story of a Wanderer — Charu Nivedita, Adayalam Publications, Chennai.*
5. *Media Studies — T. Rejith Kumar, N.C.P.H., Chennai.*
6. *Mass Communication — Ki. Raasa, Parthiban Publications.*
7. *Tamil Journals — K. Kulathooran, Jayakumari Stores, Nagercoil.*
8. *Em tamilar seitha Padangal — Theatre Baskaran*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com